செ.வெ.எண்: 71 நாள்: 26.01.2017

# பொதுமக்கள் அனைவரும் இரத்த தானம் செய்ய முன்வரவேண்டும் - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் அறிவுறுத்தல்.

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பரம்பூர் ஊராட்சி, பரம்பூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக கட்டப்பட்ட இரத்த சேமிப்பு வங்கி கட்டிடத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் 25.01.2017 அன்று திறந்து வைத்தார்.

இந்த புதிய இரத்த சேமிப்பு வங்கி கட்டிடத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழகஅரசு பொதுமக்களின் உடல் நலனை பாதுகாக்கும் வகையில் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பல்வேறு அடிப்படை வசதிகள் மற்றும் உயிர்காக்கும் சிகிச்சை தொடர்பான வசதிகளை ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள பரம்பூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய இரத்த சேமிப்பு வங்கி கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் இக்கட்டிடத்திற்கு புதிய படுக்கை வசதி, மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

இக்கட்டிடம் 65.31 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதில் மருத்துவர் அறை, ஆய்வகம், இரத்தம் சேமிப்பு அறை, இரத்தம் செலுத்தும் அறை உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகளுடன் எழிலுற கட்டப்பட்டுள்ளது. இந்த இரத்த சேமிப்பு வங்கியில் O +ve, O –ve, A+ve, A -ve, B +ve, B -ve, AB +ve, AB –ve இரத்த வகை இரத்த தானம் செய்பவர்களிடமிருந்து பெறப்பட்டு சேமித்து வைக்கப்படும். இதன் மூலம் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை பெறும் இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மிகுந்த பயன்பெறுவதுடன் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், மருத்துவப்பணியாளர்கள் டாக்டர்.முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் கர்ப்பிணி பெண்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்படும் மகப்பேறு நிதியுதவித்தொகை ரூ.4000 தற்பொழுது 5 மாதத்திலேயே கர்ப்பிணி பெண்களின் நலனை கருத்திற்கொண்டு வழங்க தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளது. எனவே அனைத்து மருத்துவப்பணியாளர்களும் கர்ப்பிணி பெண்களுக்கு மகப்பேறு நிதியுதவித்தொகை தவறாமல் கிடைக்கச்செய்வதை உறுதி செய்வதுடன் இத்தொகையை அவர்கள் சுகாதார நலத்திற்கு செலவிட அறிவுறுத்த வேண்டும். எனவே பொதுமக்கள் அனைவரும் பிறர் உயிர் காக்க இரத்த தானம் செய்ய முன்வர வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பொது சுகாதார துணை இயக்குநர் (அறந்தாங்கி) மரு.கலைவாணி, செயற்பொறியாளர் திரு.பழனிச்சாமி (மருத்துவப்பணிகள்), கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.வி.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், மதர்தெரஸா கல்விக்குழும தாளாளர் திரு.சி.உதயக்குமார், முன்னாள் பேரூராட்சித்தலைவர் திரு.குருபாபு, முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.சுப்பையா, கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், அரசு மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**